விதிமுறைகளுக்கேற்ப மின் கட்டணத்தை மாற்றியமைத்தாலும், மாற்றியமைக்கப்படுவதால் வருகின்ற கூடுதல் கட்டணத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசே ஏற்றுக்கொள்ளும். மின் பயனாளிகள் எந்தவித கூடுதல் மின் கட்டணமும் செலுத்தவேண்டிய அவசியம் எழாது என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில பத்திரிகையாளர்களும், சில அரசியல்வாதிகளும் இதை ஒரு பிரச்சினையாக்க முயற்சிக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 381, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

381—

பசுமை வீடு திட்டம்

***19683**—**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் குளச்சல் தொகுதியிலுள்ள பயனாளிகளுக்கு வீடுகள் விரைந்து கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் அலகுத் தொகையில் 2011–2012 ஆம் ஆண்டில் 101 வீடுகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 124 வீடுகளும் ஆக மொத்தம் 225 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் 99 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்

2013 மே 3]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடு திட்டமானது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மிகச் சீரிய திட்டமாகும். தீர்க்கதரிசன சிந்தனையோடு மின் பற்றாக்குறையைத் தீர்க்கும்பொருட்டு, ஏழையெளிய மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட அற்புதமான திட்டம். ஏழையெளிய மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. எனது குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 11 கிராம பஞ்சாயத்துக்களில் இந்த ஆண்டு எனக்குத் தெரிந்தபடி மொத்தம் 78 வீடுகள் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிந்தேன். ஆனால், காத்திருப்போர் பட்டியலிலே சுமார் 750 பேர்களுக்கு மேல் காத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மேலும், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளில் அநேகர் ஆரம்பத்திலே பணம் போட்டு வீடு கட்ட நிதி வசதி இல்லாத நிலையில் உள்ளனர். ஆகவே, அரசின் கண்காணிப்போடு நிதி வசதி அளித்து விரைவாகக் கட்டி முடிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசின் பசுமை வீடுகள் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட நிதியை 1,80,000 ரூபாயிலிருந்து 2,10,000 ரூபாயாக உயர்த்தியதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சாலை வசதி இல்லாத இடங்களில் கட்டுமானப் பொருட்களைக் கொண்டுசெல்வதிலே ஏற்படும் செலவினங்கள். . .*

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரின்ஸ், துணைக் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *அதிகரித்துள்ளதால், எல்லா இடங்களிலும் ஒரே அளவுகோல் வைத்திருப்பதை மாற்றி நிதியுதவியை அதிகரிக்க வேண்டும். மேலும், இந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, விரைவாக கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்துள்ள இந்தப் பசுமை வீடுகள் திட்டம், மக்கள்தொகை கணக்கு அடிப்படையின்கீழ், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வீடுகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தந்த ஒன்றியங்களினுடைய மக்கள்தொகை மற்றும் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகள் ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பிரித்துக் கொடுக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 101 வீடுகளும், 2012–2013 ஆம் ஆண்டில் 124 வீடுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 28 வீடுகள்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார். தொடர்ந்து தேர்வு செய்யப்படுவார்கள். ஏனென்று சொன்னால், ஊராட்சி மன்ற கிராம சபையிலே வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கொண்டுவரப்படவேண்டும். அப்படி ஒதுக்கப்பட்ட வீடுகள் ஒவ்வொரு ஊராட்சியிலேயும் கிராம சபைக் கூட்டம் கூட்டி இவ்வளவு நபர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைப்பார்கள். மொத்தமாக அனுப்பிவைக்கின்றபோது, எவ்வளவு வீடுகள் இந்த ஒன்றியத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவு வீடுகளும் முழுமையாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதோடு சாலை வசதிகள் இல்லாத பகுதிகளிலும்கூட கூடுதலாக செலவாகிறது என்று சொன்னார்கள். எல்லா பகுதிகளுமே கிராமப் பகுதிகள். கிராமப் பகுதிகளில் சாலை வசதிகள் இல்லாமல் ஒன்றிரண்டு இருக்கத்தான் செய்யும். சாலை போடவேண்டுமென்று சொன்னால், ஓர் இடத்திலே வீடு பட்டா நிலத்தில் இருக்கும். பிரதான சாலையில் இருந்து பயனாளருடைய சொந்த நிலம் வரை சாலை போட்டுத் தரமுடியுமா? பிரதான சாலையில் இருந்துதான் அவர்கள் கட்டுமானப் பொருட்களை

2013 மே 3]

எடுத்துச் செல்லவேண்டும். பயனாளிகள் ஓரளவுக்கு உடனிருந்து செயல்பட்டால்தான் இந்தப் பசுமை வீடுகள் திட்டம் முழுமைபெறும். எல்லா இடங்களிலும் அரசாங்கம் உடனே சாலை போடவேண்டுமென்று சொன்னால், அது உறுதியாக செய்ய இயலாத காரியமாக ஆகிவிடும். எனவே, அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற பயனாளிகள் உடன் இருக்கின்ற உறவினர்களை வைத்து அந்தப் பகுதிகளிலே வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது என்னவென்றால், இந்த திட்டத்திற்கு இப்போது உயர்த்திக் கொடுத்த நிதியை முன்கூட்டியே பயனாளிகளுக்கு கொடுத்திருந்தால், அந்த வீடுகளை உடனடியாக, கட்டியிருக்க முடியும். அதுதான் என்னுடைய கேள்வியே. கட்ட வாய்ப்பு இருக்கும். அதைத்தான் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடு) பயனாளிகள் தேர்வில் சிக்கல் இருக்கிறது. உங்களுக்கு இதை நடைமுறை படுத்துவதில் சிரமங்கள் இருக்கும். நல்ல திட்டம். பயனாளிகள் தேர்வில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பங்கும் இல்லை. அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களையும் பயனாளிகள் தேடிச் செல்வார்கள். அவர்களுக்கும் ஒரு மதிப்பு இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டு முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: முடித்துவிடுகிறேன். பயனாளிகள் தேர்விலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? வருடத்திற்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா? நிதியுதவியை அதிகரிக்க அரசு முன்வருமா? கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை நகரப் பஞ்சாயத்துகளுக்கும் விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

[2013 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்கூட்டியே பயனாளிகள் இடத்திலே வீடு கட்டுவதற்கு நிதியைக் கொடுத்துவிட்டால், விரைவாக கட்டியிருக்க முடியும் என்று உறுப்பினர் கூறினார். எல்லா பயனாளிகளும் ஒரே மன நிலையில் உள்ளவர்கள் அல்ல. ஒருசிலர் அந்த நிதியைக்கூட வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படி அந்த வாய்ப்பு உருவாகின்றபோது, கொடுக்கக்கூடிய நிதியில் அந்தப் பயனாளி வீடுகட்டவில்லை என்று சொன்னால், அரசு அலுவலர்களுக்குப் பிரச்சினை வந்துவிடுகிறது. ஏனென்று சொன்னால் அவர்களுக்கு என்று சில* Norms *கொடுத்து இருக்கிறோம். வீடு கட்டிக்கொடுக்கவேண்டும். நாமே கட்டிக்கொடுக்கவேண்டும். பயனாளிகளுக்கு எந்தெந்த வகையிலே எந்தெந்த இடத்திலே நிதியொதுக்க வேண்டுமென்றும் கொடுத்திருக்கிறோம். நிதியை முதலிலே கொடுப்போம் என்று சொன்னால், எல்லோரும் மனமுவந்து கட்டுகிறார்கள் என்று சொன்னால் பிரச்சினையே இல்லை. அந்த நிதி வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டால், பயனாளியால் வீடு கட்டமுடியாமல் அது பாதியிலே நின்றுவிடும். அந்தப் பயனாளி வேறு இடத்திலே கடன் வாங்கிக் கட்டலாம் என்று முயற்சிக்கும்போது கடன் கிடைக்கவில்லை என்று சொன்னால், அரசுக்கு பல்வேறு வகையான சிக்கல்கள் வரும். எனவே எவ்வளவு கட்டுகிறார்களோ அதற்குத் தகுந்த மாதிரி நிதியை ஒதுக்கி அந்த வீடுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கட்டிக்கொடுக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.*

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசுமை வீடுகள் திட்டத்திற்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளித்து அவர்களுக்கு அதிலே ஒரு மரியாதை கிடைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எப்போதுமே சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதியில் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்வார்கள். என்று சொன்னால், நிச்சயமாக மக்களிடத்திலே மரியாதை இருக்கும். நீங்கள் சொன்னால் அந்த அலுவலர்கள் நிச்சயமாக கேட்டுக்கொள்வார்கள். ஏனென்று சொன்னால் நீங்கள்

2013 மே 3]

மக்களோடு இருக்கின்றவர்கள். மக்களோடு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக மரியாதை இருக்கும். மக்களைச் சந்திக்காத சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிச்சயமாக மக்களிடத்திலே செல்வாக்கு இருக்காது. அதனால், உங்களுக்கு நிச்சயமாக மரியாதை இருக்கும். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் வழக்கறிஞர். மக்கள் உங்களிடத்தில் வருவதால் நீங்கள் மக்களிடத்தில் செல்கிறீர்கள். அதனால், அந்தச் செல்வாக்கோடு நீங்கள் யாருக்குப் பரிந்துரை செய்கின்றீர்களோ அவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருந்தால், அது கிராம சபையில் வைக்கப்பட்டு, கிராம சபையின்வாயிலாக நிச்சயமாக அந்தப் பயனாளிகளுக்கு பசுமை வீடுகள் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 382, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

382—

தொழிற்பேட்டை

***3740—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி தொகுதியில் அரசு தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில் தொழில் முனைவோர்கள் முன்வருகின்றபோது, கள்ளக்குறிச்சி தொகுதியில் சிட்கோ நிறுவனத்தின்மூலமாக தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.